©
GOVERNMENT OF TAMIL NADU
2017

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 4.80 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 236A] சென்னை, புதன்கிழமை, ஜூலை 19, 2017
ஆடி 3, ஹேவிளம்பி, திருவள்ளுவர் ஆண்டு-2048

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

*பக்கங்கள்*

**பொருளடக்கம்**

**சட்டமுன்வடிவுகள் :**

எண் 48/2017—தமிழ்நாடு மதுவிலக்குச் (இரண்டாம் திருத்த) சட்டம் .. 2-4

எண் 49/2017—தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டம் .. 5-11

2017—ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 19—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2017.**

**1937—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து—எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக,-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2017—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் (இரண்டாம் திருத்த) சட்டம் என்று வழங்கப்படும்.

(2) இது, மாநில அரசு, அறிவிக்கை வாயிலாக குறித்திடலாகும் தேதியன்று நடைமுறைக்கு வரும்.

3 ஆம் பிரிவிற்கான திருத்தம்

2. 1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் 3 ஆம் பிரிவில்,— தமிழ்நாடு சட்டம் x/1937

(1) (6)ஆம் கூறின், (b) உட்கூறுக்கு பதிலாக பின்வரும் உட்கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது;-

“(b) இந்திய சுங்க எல்லைப்பகுதிகளை கடக்கும் இடம் உள்ளடங்கலானவற்றை தமிழ்நாடு மாநிலத்திலிருந்து கொண்டு செல்லுதல்;”

(2) (7)ஆம் கூறின், (b) உட்கூறுக்கு பதிலாக பின்வரும் உட்கூறு மற்றும் விளக்கத்தை மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது;-

“(b) இந்திய சுங்க எல்லைப்பகுதிகளை கடக்கும் இடம் உள்ளடங்கலானவற்றை தமிழ்நாடு மாநிலத்திற்குக் கொண்டு வருதல்;

விளக்கம்.— (6) ஆம் கூறில் (b) உட்கூறின் மற்றும் (7) ஆம் கூறில் (b) உட்கூறின் நோக்கத்திற்காக,—

(i) “இந்திய சுங்க எல்லைகள்” என்பது, சுங்கஅதிகார அமைப்புகளால் தடைநீக்கம் செய்யப்படும் முன்பு இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகள் அல்லது ஏற்றுமதி செய்யப்படுவதற்கான சரக்குகளை வழக்கமாக வைத்துவரப்படும் சுங்கச்சாவடி பகுதியின் எல்லைகள் என்று பொருள்படும்;

(ii) “சுங்கச் சாவடி” என்பது, சுங்கத் துறைமுகம், சுங்க வானூர்தி நிலையம், அல்லது நில சுங்கச் சாவடி நிலையம் என்று பொருள்படும்.”.

**நோக்க—காரண விளக்கவுரை**

பிற நாடுகளுக்கு பீர் ஏற்றுமதி செய்வதற்கு இயல்விக்கும் பொருட்டு, 1937—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் X/1937) 3 ஆம் பிரிவின் (6) ஆம் கூறு மற்றும் (7) ஆம் கூறை மேற்காணும் நோக்கத்திற்காக தகுந்தவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**பி. தங்கமணி,**
*மின்சாரம், மதுவிலக்கு மற்றும்*
*ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்*

க. பூபதி,
*செயலாளர் (பொறுப்பு).*

2017—ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 19—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 49/2017.

**2017—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகைசெய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் அறுபத்து எட்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. இந்தச் சட்டம், 2017—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 3) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

தமிழ்நாடு சட்டம் 15/2017.

2017—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகுநிதியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு செய்தல்

2. மாநில அரசு, 2017—ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டத்தின் 2—ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஒரு இலட்சத்து ஐம்பத்தேழாயிரத்து எழுநூற்று எழுபத்து மூன்று கோடியே நாற்பத்தெட்டு இலட்சத்து இருபத்து மூன்றாயிரம் ரூபாய் தொகையை உள்ளடக்குகின்றதும், 2017—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் தேவைப்படுவதுமான இரண்டு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து முந்நூற்று முப்பத்தொன்பது கோடியே நாற்பத்தேழு இலட்சத்து முப்பத்து மூன்றாயிரம் ரூபாய்க்கு மேற்படாததொரு தொகையை—

(a) இணைப்புப் பட்டியலின் (3)—ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காகத் தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட மானியங்களையும்;

(b) இணைப்புப் பட்டியலின் (4)—ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்ட செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யலாம்.

## இணைப்புப் பட்டியல்

(2–ஆம் பிரிவைக் காண்க)

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | *(4)* | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | வருவாய் | 42,95,08,000 | *33,52,000* | 43,28,60,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | வருவாய் | 35,37,83,000 | *10,53,76,000* | 45,91,59,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 3 | நீதி நிருவாகம் | வருவாய் | 820,51,54,000 | *163,39,97,000* | 983,91,51,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | வருவாய் | 3,038,34,68,000 | *14,00,03,000* | 3,052,34,71,000 |
| | | மூலதனம் | 229,01,19,000 | ... | 229,01,19,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 5 | வேளாண்மைத் துறை | வருவாய் | 7,047,39,46,000 | *4,000* | 7,047,39,50,000 |
| | | மூலதனம் | 437,09,65,000 | ... | 437,09,65,000 |
| | | கடன் | 130,50,00,000 | ... | 130,50,00,000 |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 1,129,85,40,000 | *3,000* | 1,129,85,43,000 |
| | | மூலதனம் | 31,07,58,000 | ... | 31,07,58,000 |
| | | கடன் | 25,00,000 | ... | 25,00,000 |
| 7 | மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 619,17,86,000 | *1,000* | 619,17,87,000 |
| | | மூலதனம் | 149,14,65,000 | ... | 149,14,65,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 8 | பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 65,10,10,000 | *1,000* | 65,10,11,000 |
| | | மூலதனம் | 65,00,01,000 | ... | 65,00,01,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | வருவாய் | 962,47,07,000 | *1,50,10,000* | 963,97,17,000 |
| | | மூலதனம் | 23,79,09,000 | ... | 23,79,09,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 336,51,60,000 | *2,000* | 336,51,62,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | *மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) | *(4)* | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 11 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 285,53,13,000 | *1,000* | 285,53,14,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 2,424,29,34,000 | *3,000* | 2,424,29,37,000 |
| | | மூலதனம் | 34,56,97,000 | ... | 34,56,97,000 |
| | | கடன் | 12,37,80,000 | ... | 12,37,80,000 |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 5,734,99,71,000 | *4,000* | 5,734,99,75,000 |
| | | மூலதனம் | 286,88,65,000 | ... | 286,88,65,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 14 | எரிசக்தித் துறை | வருவாய் | 9,216,60,66,000 | *1,000* | 9,216,60,67,000 |
| | | மூலதனம் | 2,275,00,06,000 | ... | 2,275,00,06,000 |
| | | கடன் | 1,474,20,04,000 | ... | 1,474,20,04,000 |
| 15 | சுற்றுச்சூழல் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | வருவாய் | 10,09,54,000 | *1,000* | 10,09,55,000 |
| | | மூலதனம் | 18,18,00,000 | ... | 18,18,00,000 |
| | | கடன் | 20,00,01,000 | ... | 20,00,01,000 |
| 16 | நிதித் துறை | வருவாய் | 1,107,67,13,000 | *5,000* | 1,107,67,18,000 |
| | | மூலதனம் | 2,000,00,02,000 | ... | 2,000,00,02,000 |
| | | கடன் | 146,17,23,000 | ... | 146,17,23,000 |
| 17 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 1,161,28,60,000 | *1,000* | 1,161,28,61,000 |
| | | மூலதனம் | 1,45,01,000 | ... | 1,45,01,000 |
| | | கடன் | 71,95,06,000 | ... | 71,95,06,000 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 193,56,07,000 | *2,000* | 193,56,09,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | வருவாய் | 10,104,10,29,000 | *1,09,28,000* | 10,105,19,57,000 |
| | | மூலதனம் | 52,66,14,000 | ... | 52,66,14,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 20 | உயர் கல்வித் துறை | வருவாய் | 3,524,72,86,000 | *2,000* | 3,524,72,88,000 |
| | | மூலதனம் | 155,66,85,000 | *2,000* | 155,66,87,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | *(4)* | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | வருவாய் | 1,398,95,62,000 | *5,000* | 1,398,95,67,000 |
| | | மூலதனம் | 8,667,67,98,000 | *3,000* | 8,667,68,01,000 |
| | | கடன் | 2,000 | ... | 2,000 |
| 22 | காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 6,044,84,44,000 | *3,48,55,000* | 6,048,32,99,000 |
| | | மூலதனம் | 430,00,04,000 | ... | 430,00,04,000 |
| | | கடன் | 5,00,03,000 | ... | 5,00,03,000 |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 247,25,49,000 | *1,000* | 247,25,50,000 |
| | | மூலதனம் | 6,23,70,000 | ... | 6,23,70,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 24 | சிறைச்சாலைகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 271,08,49,000 | *6,000* | 271,08,55,000 |
| | | மூலதனம் | 10,78,23,000 | ... | 10,78,23,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள் – நிருவாகம் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 245,67,53,000 | *1,000* | 245,67,54,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | வருவாய் | 1,372,52,54,000 | *2,000* | 1,372,52,56,000 |
| | | மூலதனம் | 618,83,15,000 | ... | 618,83,15,000 |
| | | கடன் | 660,00,01,000 | ... | 660,00,01,000 |
| 27 | தொழில் துறை | வருவாய் | 1,737,67,77,000 | *3,000* | 1,737,67,80,000 |
| | | மூலதனம் | 6,000 | ... | 6,000 |
| | | கடன் | 350,00,10,000 | ... | 350,00,10,000 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 73,32,81,000 | ... | 73,32,81,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 29 | சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | வருவாய் | 95,52,01,000 | *7,000* | 95,52,08,000 |
| | | மூலதனம் | 70,83,62,000 | ... | 70,83,62,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 30 | எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 112,84,46,000 | *10,03,000* | 112,94,49,000 |
| | | மூலதனம் | 4,000 | ... | 4,000 |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | *(4)* | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 31 | தகவல் தொழில்நுட்பவியல் துறை | வருவாய் | 107,48,41,000 | *1,000* | 107,48,42,000 |
| | | மூலதனம் | 8,50,00,000 | ... | 8,50,00,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | வருவாய் | 992,23,20,000 | *7,000* | 992,23,27,000 |
| | | மூலதனம் | 18,04,46,000 | ... | 18,04,46,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 33 | சட்டத் துறை | வருவாய் | 26,99,92,000 | *1,000* | 26,99,93,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | வருவாய் | 7,918,98,31,000 | *3,000* | 7,918,98,34,000 |
| | | மூலதனம் | 5,803,05,23,000 | ... | 5,803,05,23,000 |
| | | கடன் | 274,32,82,000 | ... | 274,32,82,000 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | வருவாய் | 94,13,28,000 | *68,71,03,000* | 162,84,31,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | 37,50,000 | ... | 37,50,000 |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | வருவாய் | 252,14,32,000 | *4,000* | 252,14,36,000 |
| | | மூலதனம் | 175,67,00,000 | ... | 175,67,00,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 107,25,54,000 | *1,000* | 107,25,55,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 38 | பொதுத் துறை | வருவாய் | 415,08,53,000 | *16,05,000* | 415,24,58,000 |
| | | மூலதனம் | 3,000 | ... | 3,000 |
| | | கடன் | 20,50,00,000 | ... | 20,50,00,000 |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | வருவாய் | 261,86,86,000 | *2,000* | 261,86,88,000 |
| | | மூலதனம் | 984,68,72,000 | ... | 984,68,72,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | வருவாய் | 1,815,40,70,000 | *2,000* | 1,815,40,72,000 |
| | | மூலதனம் | 2,972,19,72,000 | *3,00,03,000* | 2,975,19,75,000 |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | *மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | *(4)* | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 41 | வருவாய்த் துறை | வருவாய் | 5,692,67,18,000 | *13,000* | 5,692,67,31,000 |
| | | மூலதனம் | 2,64,10,000 | *1,000* | 2,64,11,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | வருவாய் | 15,236,98,50,000 | *5,000* | 15,236,98,55,000 |
| | | மூலதனம் | 1,428,44,06,000 | ... | 1,428,44,06,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | வருவாய் | 26,579,27,43,000 | *31,64,000* | 26,579,59,07,000 |
| | | மூலதனம் | 352,72,20,000 | ... | 352,72,20,000 |
| | | கடன் | 2,000 | ... | 2,000 |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | வருவாய் | 482,28,64,000 | *1,000* | 482,28,65,000 |
| | | மூலதனம் | 50,03,04,000 | ... | 50,03,04,000 |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 45 | சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | வருவாய் | 4,777,13,16,000 | *1,000* | 4,777,13,17,000 |
| | | மூலதனம் | 4,04,03,000 | ... | 4,04,03,000 |
| | | கடன் | 2,000 | ... | 2,000 |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 47,85,00,000 | *3,000* | 47,85,03,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | வருவாய் | 86,72,11,000 | *3,00,00,000* | 89,72,11,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 48 | போக்குவரத்துத் துறை | வருவாய் | 1,466,55,90,000 | *3,000* | 1,466,55,93,000 |
| | | மூலதனம் | 350,00,05,000 | ... | 350,00,05,000 |
| | | கடன் | 375,00,09,000 | ... | 375,00,09,000 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | வருவாய் | 165,47,53,000 | *1,000* | 165,47,54,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | வருவாய் | 22,386,54,59,000 | *7,83,26,000* | 22,394,37,85,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | வருவாய் | 748,19,08,000 | *2,000* | 748,19,10,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | *மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) (ரூ.) | (4) (ரூ.) | (5) (ரூ.) |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | வருவாய் | 466,18,22,000 | *1,000* | 466,18,23,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 53 | சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை | வருவாய் | 760,85,11,000 | *1,000* | 760,85,12,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 1,000 | ... | 1,000 |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | வருவாய் | 376,03,89,000 | *2,000* | 376,03,91,000 |
| | | மூலதனம் | 143,14,35,000 | ... | 143,14,35,000 |
| | | கடன் | ... | ... | ... |
| | கடன் செலவுகள் | வருவாய் | ... | *25,691,37,94,000* | 25,691,37,94,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| | பொதுக் கடன் – திருப்பிச் செலுத்துதல் | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | *11,248,22,80,000* | 11,248,22,80,000 |
| | மொத்தம் | வருவாய் | **150,724,64,52,000** | ***25,965,86,26,000*** | **176,690,50,78,000** |
| | | மூலதனம் | **27,857,07,70,000** | ***3,00,09,000*** | **27,860,07,79,000** |
| | | கடன் | **3,540,65,96,000** | ***11,248,22,80,000*** | **14,788,88,76,000** |
| | | பெருமொத்தம் | **182,122,38,18,000** | ***37,217,09,15,000*** | ***219,339,47,33,000*** |

## நோக்க–காரண விளக்கவுரை.

இச்சட்ட முன்வடிவானது––

(a) 2017–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டிற்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட மானியங்களையும்;

(b) அந்த ஆண்டிற்காக, மாநிலத் தொகுநிதியத்தின் மீது *சாட்டப்பட்ட* செலவினத்தையும்,

எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தொகைகளை மாநிலத்தின் தொகு நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 204–ஆம் உறுப்பின் (1)–ஆம் கூறினையொட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

**D. ஜெயக்குமார்,**
**மீன்வளம், நிதி மற்றும் பணியாளர் (ம) நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்.**

**க. பூபதி,**
*செயலாளர் (பொறுப்பு)*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.